# என்னுரை

உளி எழுத்துக்கள் பிறப்பெடுக்க முப்பது ஆண்டுகள் அடைகாத்திருந்தேன். புதிய தலைமுறையைச் சந்திக்க 30 ஆண்டுகள் கண்விழித்துக் காத்திருந்தேன்.

வாழ்க்கைக் கணக்கு என்றும் முடியும் என்பது இயல்பு என்று தெரிந்ததால் காலம் வரும் எனக் காத்திராமல் இந்த உளி எழுத்துக்களை 60 நாட்களில் ரெயிலிலும், விமான நிலையத்திலும், காரிலுமாக எழுதிச் செதுக்கி இருக்கிறேன்.

திட்டமிடல், வடிவமைத்தல், செயலாக்கம் இவற்றோடு கட்டிடங்களில், ஆலயங்களில், சிற்பங்களில் வாழ்க்கைச் சக்கரத்தை ஓட்டிக் கொண்டிருக்கும் என்னுடன் ஒட்டிப் பிறந்துவிட்ட மரபணுக்களில் எனக்கு நம்பிக்கையுண்டு. எனது தந்தையார் 'சில்பகலா பிரவீணா' ஸ்தபதி திரு.S.K.ஆச்சாரி அவர்கள் தனது இளம்வயதில் தன் தந்தையை இழந்தாலும், உளி எனும் வாள் பிடித்து வாழ்வில் வெற்றி கண்டவர். அவர் குமரியில் விவேகானந்தருக்கு நினைவில் நிற்கும் நினைவுச் சின்னத்தைச் செதுக்கிய படைப்பாளர்.

எனது தாய் மாமா மறைந்த டாக்டர் திரு.வை.கணபதி ஸ்தபதி அவர்கள் மதுரையில் தமிழ் அன்னைக்கும், குமரியில் வான்புகழ் வள்ளுவருக்கும் சிலை வடித்த சிற்பக் கலைஞர். தாய் மாமா என்ற உரிமையில் நான் சிறுவயது முதல் அவர் மடியில் அமர்ந்து கலைச் சோறு உண்டவன். இன்று அவர் உருவாக்கிய வாஸ்து வேத ஆய்வு நிறுவனத்தின் மேலாண்மை அறங்காவலராக இருக்கிறேன்.



பாலகன் வயதில் பயிற்சி கொள்ளும் முன்னர் நான் வடித்த ஓவியங்களும், சிற்பங்களும் பாராட்டைப் பெற்றபோது அதன் காரணம் தெரிய எனக்கு 20 ஆண்டுகள் ஆயின. எனது முன்னவர்களான படைப்பாளிகள் எனது விரல்களிலும் இரத்த நாளங்களிலும் வசிக்கின்றனர் என்பதுதான் அது.படைப்பாளர் குடும்பத்தில் பிறந்த எனக்குள் பற்பல கலை அதிசயங்களை உருவாக்கிய விண்ணவர்கள் மரபணுக்களாக நிறைந்திருக்கின்றனர் என்ற அறிவியல் உண்மைதான் அது.

அக்காலத்தில் இன்றைய மேலை நாட்டுக் கல்வி பயிலாத படைப்பாளிகள் விண்ணை முட்டும் அதிசயங்கள் படைத்ததின் உண்மையும் அன்றுதான்

தெரிந்தது. படைப்பாளன், படைப்புக் குறித்து விளக்கம் குறித்துப் பேசும் இதயத் தாமரையான இந்த ‘உளி எழுத்துக்களை’, சங்க காலத் தமிழனின் பொற்றாமரைக் குளமாய் உங்கள் மனங்களை எண்ணி அதில் வைக்கிறேன். இந்நூல் காலத்தை வென்று கம்பீரமாக நிற்கும் என்ற நம்பிக்கை உண்டு.

உண்மைப் படைப்பாளிகள், படைப்பு விந்தையில் வசப்பட்டுப் போவார்கள். அவர்கள் செல்வம், குடும்பம், உணவு இவற்றிற்கு முன்னுரிமை அளிக்காதவர்கள். “உருவாக்குதலில், தான் அதுவாகவே மாறினால்தான் படைப்பு வெற்றி பெறும் என்பதில் தன்னை மறந்தவர்கள். புத்தன் படிமம் உருவாக்க வேண்டுமெனில், சிற்பி புத்தனாகவே மாறவேண்டும். சிற்பியே சிற்பமாகிறான், கவிஞனே கவிதை ஆகிறான்” என்று மாமா திரு.கணபதி ஸ்தபதி அவர்கள் அழகாகச் சொல்வார்கள்.

இன்றுவரை நான் வாழ்வில் குதூகலித்தது ஒரே ஒருமுறைதான். அது 1986-ல் பழந்தமிழ் படைப்பாளன் மயப் பெருந்தச்சனின் ‘ஐந்திறம்’ நூலை அன்றைய முதல் அமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.ஆர் அவர்கள் மதுரையில் உலகத் தமிழ் மாநாட்டு மேடையில் தனது பொற்கரங்களால் வெளியிட்ட நேரம். மாமல்லபுரக் கற்றளிகளின் உள்ளே படைப்பாளனின் உணர்வைத் தேடினோம். தஞ்சைப் பெரிய கோவிலில் படைப்பாளியின் உயிர்ப்பின் கணக்கினைத் தேடினோம். இவ்வாறாக புவனேஷ்வர் ஆலயங்களில், சித்தன்ன வாசலில், கழுகு மலையில், எலிஃபெண்டா குகைகளில், பூம்புகாரில், கடல் உண்ட குமரிக் கண்டத்தில், மெக்ஸிகோ பிரமிடுகளில், அங்கோர்வாட்டில், சிலப்பதிகாரத்தில், நெடுநல்வாடையில், இராமாயணத்தில், மகாபாரதத்தில், பண்டைய மரபுச் சிற்பங்களில், கோட்டைகளில், கோபுரங்களில், பண்டையக் நகர அமைப்பில், தமிழர் பண்பாட்டில், மொகஞ் சதாரோவில், இசையில், நடனத்தில் தேடினோம்... தேடினோம்.

மயன் கிடைத்தபின், நாம் தேடியது கிடைத்தது. அதுதான் நாம் தேடிய இயற்கையின் மூலக்கூறுகளுடன் இணைந்த மையம். அதுதான் நமது அகத்திலும், புறத்திலும் நின்று அசைந்தாடும் அந்த ஒளி நூல். ஆற்றலோடு ஒன்றியிருக்கும் அதுவே, நமது அகத்திரையின் மையப் புள்ளியோடு படைப்புப் பேரதிசயத்தின் மையத்தை இணைக்கும் கோடு. அந்த ஒளி நூலினை மயன், நின்றாடும் ஒளி நடராசன் என்பான்.

அதுதான் இயற்கை இயல்பில் உருவாகிய மரம், மலைகள், நீர் நிலைகள், மானுடம் நிலைபெறச் செய்யும் பிரம்ம சூத்திரம். கால விசையில் துடிப்புறும் இவ்வொளி நூல்தான் படைப்பிற்கு அச்சாணி. நூல் பிறழ்ந்தால், ஒளிநூலுடனான ஆற்றல் பிரிந்தால், உலகம் உதிர்ந்துவிடும். அதை அளந்தவன் படைப்பாளி.

அதனையே படைப்பின் அளவுகளாக்கி அகத்திரையில் படிந்ததை வடிவங்களாக்கிய பெருமை படைப்பாளனைச் சாரும். படைப்பாளனின் எண்ணக் கோடுகள்தான் எழுத்துருக்களாக, சொல்லுருக்களாக, கருவிகளாக, வினைப்படு பொருட்களாக, கட்டிடங்களாக, சிற்பங்களாக ஆக்கம் பெற்றிருகிஇன்றன.

இதனால்தான், நமது கலைகள் வாழும் இந்தோனேஷியாவில் படைப்பாளனை, 'உண்டாக்கி' (Creator) என்றே அழைப்பர். நாம் காணும் ஒவ்வொரு மனிதப் படைப்புகளும் படைப்பாளனின் எண்ணக்கூட்டில் பயிரிடப்பட்டு விளைந்த விளைச்சல்கள் ஆகும். எத்துறையினர் ஆயினும், படைப்புத் தொழில் செய்யும் யாவரும் படைப்பாளர்களே! படைப்பாளனன்றி படைப்பு இல்லை என்பதால், அவனை மறக்காமலும், மறைக்காமலும் இருப்பது அவசியம்!

பாரத நாட்டின் பழம்பெரும் படைப்பாளர்களைப் போற்றுங்கள். அவர்கள் வாழ்வை உயர்த்துங்கள், படைப்புகளைக் காத்திடுங்கள் என்பதே இந்நூல் மூலம் நான் வைக்கும் கோரிக்கை. இன்றையப் பொருளாதார மாற்றுச் சூழலில் மரபுப் படைப்பாளர்களின் தொழில் வாய்ப்புகள் குன்றிக் கொண்டிருக்கிறது என்பதால், படைப்புத் தொழிலுக்குப் பாதுகாப்பும், மரபினைக் காத்திட அவர்களுக்கு முன்னுரிமையும் கிடைக்க ஆவண செய்ய வேண்டுகிறேன்.

இந்நூல் படைப்பாளர் மட்டுமின்றி ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டும் எனும் நோக்கிலும், இளைஞர்கள் தமது ஆய்வுப்பணிகளுக்குப் பயன்படுத்தி, படைப்பாளன் பெருமை மற்றும் மறைந்து வரும் மரபுக் கலைகளைக் காக்க வேண்டும் எனும் நோக்கிலுமே எழுதப்பட்டது. இந்நூலுக்கு அணிந்துரை நல்கிய ஆசிய நட்சத்திரம் டாக்டர் திருக்குறள் கேசவ சுப்பையா அவர்களுக்கும், அகில பாரதீய விஸ்வகர்ம ஜெகத்குரு ஸ்ரீ சிவசண்முக ஞானாச்சார்ய குரு சுவாமிகள் மற்றும் சிவஸ்ரீ. சிவ.சிவராஜன் சுவாமிகளுக்கும் எனது நன்றிகள் இந்நூலை ஒளியச்சு செய்தளித்த முத்துக் குமாருக்கும், எனது எழுத்துக்களை, அழகிய நூலாக உருவாக்கி, வடிமைத்துத் தந்த YA Media International நிறுவனத்தின் திரு. எஸ்.பி.அண்ணாமலை குழுவினருக்கும் எனது நன்றிகள்.

இந்நூல் சிந்தனையைத் தூண்டும் என்ற நம்பிக்கையோடு படிக்கத் துவங்கும் வாசகர்களாகிய உங்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

– **கரு. தட்சிணாமூர்த்தி**

22/46, கஜீரா கார்டன் முதல் தெரு, நீலாங்கரை, சென்னை 600115.

மின்னஞ்சல் : vivekvedic2003@yahoo.com